بسم الله الرحمن الرحيم

**Friday Sermon** / வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா

**12 January 2018**

**(24 Rabi'ul Aakhir 1439 AH)**

# "ANGER/ WRATH"

# "கோபம; / கடுங்கோபம்"



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

**ச**லாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும் தஅவசும் அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

கோபத்தை இறைக்கோபத்துடன் இணைத்து குழப்பிக் கொள்ள வேண்டாம். அல்லாஹ் அவனது கோபத்தை தம் தூதர் மூலம் வெளிப்படுத்திக் கொள்கின்றான். அது, நம்பிக்கையாளர்களின் சில செயல்களை அங்கீகரித்துக் கொள்ளவில்லை என்பதன் அடையாளமாகவும் மற்றும் அவநம்பிக்கையாளர்களின் சில செயல்களுக்கு மறுப்பு தெரிவிக்கும் குறியீடாகவும் தென்பட்டுக் கொள்கின்றது. ஷைத்தான் இத்தகைய தவறுகளை செய்ய மனிதனை தூண்டிக் கொள்கின்றான். அதாவது அவமரியாதையாக செயல்படுதல், உறவுகளை உடைத்தல், உடலளவில் ஆக்கிரமித்தல் அல்லது சரிசெய்ய முடியாதபடி கொலை செய்தல் போன்றவைகள். எனவே நாம் நம் கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்வதற்கான ஆற்றலை பெற்றுக் கொண்டால், இத்தகைய கொடிய பாவங்களிலிருந்து நமக்கு விலகி நிற்க முடிந்து விடும்.

அல்லாஹ் முத்தகியைக் குறித்து அதாவது கோபத்தைக் கட்டுப்படுத்துகின்றவர்களைக் குறித்து கூறுகின்றான்.

**“(அவர்கள்) கோபத்தை அடக்குபவர்களும் மக்களை மன்னிப்பவர்களுமாவர்”** (3:135).

எனவே அல்லாஹ் முத்தகிங்களுக்கு சுவர்க்கத்தை வாக்களித்திருக்கின்றான். ஏனெனில் அவர்கள் தங்களின் கோபத்தை கட்டுப்படுத்துகின்றனர். அத்தோடு அவர்களுக்கு பலமும் தைரியமும் இருந்தும், அவர்களுக்கு தீங்கிழைப்பவர்களுக்கு மன்னிப்பளிப்பவராகவும் இருக்கின்றனர்.

நமது கோபத்தை நாம் கட்டுப்படுத்துவதன் மூலம் இஸ்லாம் பாதுகாக்கப்படுகின்றது. நமது கோபத்தை அடக்குவதால் மிக சிறந்த நிலையில் இஸ்லாமை நடைமுறையில் கொண்டு வர நமக்கு முடிந்து விடும். மேலும் கூறிக்கொண்டால், ஒரு நபருக்கு தனது கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்ளமுடிந்தவரை அவரது நம்பிக்கை பாதுகாக்கப்படுகின்றது. இருப்பினும், ஒருவர் கோபத்திற்குள்ளாகிவிட்டால், அது அவருக்கு வருத்தமும் கவலையுமின்றி வேறு எதையும் விளைவிப்பதில்லை. **“நான் ஏன் அவ்வாறு கூறினேன்?” “நான் ஏன் அவ்வாறு செய்தேன்?”** என்று அவர் தன்னைத் தானே கேட்டுக் கொண்டேயிருப்பார்.

அபூகுறையிரா(ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்.

**அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் ஒருவர் கேட்டுக் கொண்டார். “எனக்கு அறிவுரை அளித்துக் கொள்ளுங்கள்” அதற்கு**

**திருதூதர்(ஸல்) அவர்கள் கூறியதாவது "நீங்கள் கோபப்படாதீர்கள்". அக்கேள்வியை அவர் பலமுறை மேலும் கேட்டார். அப்போதெல்லாம் திருதூதர்(ஸல்) அவர்கள் அளித்த பதிலாவது "நீங்கள் கோபப்படாதீர்கள்"** (புகாரி)

பலம் வாய்ந்தவர்கள் பிறருக்கு தீங்கிழைக்காமலிருங்கள். அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார். **"பலம் வாய்ந்த வீரர் என்பது, போரில் எதிராளியை வெல்பவரல்ல. மாறாக பெருங்கோபம் வந்தாலும் அக்கோபத்தை சுயம் கட்டுப்படுத்திக் கொள்பவர் எவரோ அவரே தாம் உண்மையில் பலம் வாய்ந்த வீரர்"** (புகாரி)

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) நவின்றார்கள்.

**"அடக்கிக் கொள்ளயியலாத கோபத்தை எவர் ஒருவர் அடக்கிக் கொள்வாரோ, அவரை இறுதிநாளில் மற்று படைப்பினங்களின் முன் வைத்து அல்லாஹ் அழைப்பான். பின்னர் அவரிடம் அல்லாஹ் கூறுவான் "நீங்கள் விரும்பும் ஒரு ஹூரியை(Houri) தேர்ந்தெடுங்கள்"** (அபூதாவூத்)

ஒருவருக்கு கோபத்தை வெல்ல முடிந்துவிட்டால் அவருக்கு ஒருபோதும் அநீதியிழைக்க முடிவதில்லை. ஆயினும் நாம் கோபமடைந்தாலும் நாம் எப்போதும் நீதிமானாகவேயிருக்க வேண்டும். கோபத்தை அடக்குதல் என்பது அல்லாஹ்வின் பார்வையில் ஒரு உன்னதமான செயலாக கருதப்படுகின்றது. எனவே அத்தகைய செயலுக்கு அல்லாஹ் மிக சிறந்த வெகுமதியை (Great reward) அளித்துக் கொள்கின்றான்.

மேலும் அபூதர்தா(ரலி) அவர்கள் கூறியிருப்பதாக காணலாம். அன்னார் திருதூதர்(ஸல்) அவர்களிடத்தில் வினவினார்.

**"இறைத்தூதரே! என்னை சொர்க்கத்தின்பால் நுழையவைக்கும் ஒரு செயலைக் குறித்து கூறுங்கள். திருதூதர்(ஸல்) அவர்கள் பதிலளித்தார். "நீங்கள் கோபப்படாமலிருங்கள். அதற்குரிய நற்கூலியாக நீங்கள் சொர்க்கத்தில் நுழைந்துவிடுவீர்கள்"** (அத்தபரானி)

## How to Control one's anger?

### ஒருவருக்கு தம் கோபத்தை எப்படி கட்டுப்படுத்திக் கொள்ளலாம்?

ஒரு நபருக்கு கோபம் வரும் பொழுது பின்வரும் வழிமுறைகள் மூலம் அதை கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

1. **ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பை தேட வேண்டும். (அவுதுபில்லாஹி மின ஷைத்தானிரஜீம்)**
2. **அமைதியாக இருக்க வேண்டும்.**

3. **கோபம் வரும் வேளையில் அவர் நின்று கொண்டிருந்தால் அவர் உட்கார்ந்து கொள்ள வேண்டும் அல்லது படுத்துக் கொள்ள வேண்டும்.**

திருதூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் **“ஒருவர் கோபமடைந்து விட்டால், நான் சாத்தானுக்கு எதிராக இறைவனிடத்தில் அடைக்கலம் தேடுகிறேன் என்று அவர் பிரார்த்தனை செய்தால் அவரின் அக்கோபம் தணிந்துவிடும்”** (புகாரி, முஸ்லீம்)

ரசூல்(ஸல்) அவர்கள் நவின்றார்கள்

**“உங்களில் ஒருவருக்கு கோபம் வரும்பொழுது, அந்நேரம் அவர் நின்று கொண்டிருந்தால் அவர் உட்கார்ந்து கொள்ள வேண்டும். அப்பொழுதும் கோபம் அடங்கவில்லையென்றால் அவர் படுத்துக் கொள்ள வேண்டும்”** (அபூதாவூத்)

திருத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். **“ஒருவருக்கு கோபம் வரும்பொழுது அவர் அமைதியாக இருந்திடவேண்டும்”** (அஹமது)

4. **கோபத்தை அடக்கிக் கொள்வதற்கு உது (wudu) செய்து கொள்ள வேண்டும்.**

கோபத்தை அடக்குவதற்கு உது செய்ய கற்பிக்கின்ற நபி வசனங்கள் உள்ளன. அல்லாஹ்வின் தூதர் கூறியதாக ஹதீஸில் காணலாம். **“கோபம் ஷைத்தானிடமிருந்து வருகின்றது. ஷைத்தானை அக்கினியால் படைக்கப்பட்டிருக்கின்றது. தண்ணீர் அக்கினியை அழித்துவிடுகின்றது. ஆகவே உங்களில் ஒருவருக்கு கோபம் வரும் பொழுது அவர் உது செய்யட்டும்”** (அபூதாவூத் அஹம்மது)

கோபத்தைப்பற்றி நான் எடுத்துக் கூறிய அனைத்து நபி மொழிகளும் மிக முக்கியத்துவமானதாகும். ஏனெனில் எல்லா சூழ்நிலைகளிலும் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுவதற்கு முஸ்லீம்களுக்கு கட்டளை விடுக்கப்பட்டிருக்கின்றது. சில நேரங்களில் பலவீனத்தால் சிலர் கோபமுடையவராகின்றனர். ஆனால் அவர் அவ்வேளையில் சுயம் கட்டுப்படுத்திக் கொண்டால், சாபத்திற்குரிய ஷைத்தானின் தீங்குகளிலிருந்து அல்லாஹ்விடம் அடைக்கலத்தை தேடிக் கொண்டால், அந்நேரம் நிச்சயமாகவும் அல்லாஹ் அவர்களுக்கு உதவியளித்துக் கொள்வான்.

இறைகோபத்தைக் குறித்து கூறும்போது இது மிக முக்கியத்துவமான காரியமாகயிருக்கின்றது. அதாவது நமக்கு தெரிந்தது போன்று சர்வ வல்லவனாகிய அல்லாஹ்விடம் எந்த விதமான செல்வாக்கும் ஷைத்தானுக்கில்லை. மாறாக ஷைத்தான், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்பவனாக இருக்கின்றான். அல்லாஹ்வின் கோபத்தை ஈர்த்துக் கொள்ளும் நபர் கடுமையான தண்டனைக்கு ஆளாகின்றார். இறைக்கோபம் என்பது இவ்வுலக வாழ்க்கையில் அழிவிற்கும் மறுவுலக வாழ்க்கையில் இழப்பிற்கும்

காரணமாகின்றது. ஷைத்தான், அவன் சுயம் தான் இறைக் கோபத்திற்கு ஆளாகியிருக்கின்றான். இறைவனுக்கு கீழ்படியாமலிருப்பது மூலம் அவன் நரக நெருப்பில் என்றென்றும் தண்டிக்கப்படுவான்.

ஒரு இறைத்தூதரின் காலகட்டத்தின் போது அல்லாஹ் அவனது கோபத்தை அவன் தேர்ந்தெடுப்பவர் மூலம் வெளிப்படுத்திக் கொள்கிறான். அது வாயிலாக சம்பந்தப்பட்ட நபருக்கு கடுமையான தண்டனையைக் குறித்து அச்சுறுத்தப்படுகின்றது. உடனடியாக அந்நபர் அல்லாஹ்விடம் மன்னிப்பைத் தேடிக் கொள்ளவும், சுயம் சீர்திருத்தக் கொள்ளவும் வேண்டும். அல்லா விட்டால் இறைக் கோபம் அந்த மடையனாகிய அவநம்பிக்கையாளரை தூளாக்கிவிடும். அத்தோடு ஒரு நம்பிக்கையாளரைப் பொறுத்தவரையில், அது (அந்த அச்சுறுத்தல்) அவருக்கு மிக தெளிவானதும் ஆற்றலுடையதுமான ஒரு அடையாளமாகயிருக்கின்றது. அதாவது இறைவழியில் திரும்பிக் கொள்வதற்கும் நிலையாக செயல்படுவதற்கும் அவருக்கு கிடைக்கும் ஒரு அடையாளமாகயிருக்கின்றது. அதாவது ஒரு நம்பிக்கையாளரிடம் அல்லாஹ் கோபம் கொள்ளுவது, அவரை தவறான பாதையிலிருந்து அகற்றுவதற்கும், நெறியான பாதையில் கொண்டு சேர்ப்பதற்குமாகும். (ஒரு நம்பிகையாளரிடம் அல்லாஹ் கோபம் கொள்ளுவது) அவர் சுயம் சீர்திருத்திக் கொள்ளுவதற்கும் இறை திருப்தியையும் மகிழ்ச்சியையும் அவரை ருசிக்கவைப்பதற்குமாகும்.

உங்களின் கோபத்தை கட்டுப்படுத்துவதற்கான வழியை அல்லாஹ் உங்களுக்கு காட்டுவானாக! அவனது கோபத்திலிருந்து அவன் உங்களை பாதுகாப்பானாக!அவன் தேர்ந்தெடுத்தவரையும் அவன் பாதுகாப்பானாக! எல்லாவிதமான நேர்மையுடைனும் இஸ்லாமிகமார்க்கத்தில் வாழ்ந்து கொள்வதற்கு அவன் நமக்கு வழிவகுப்பானாக! இன்ஷா அல்லாஹ்!ஆமீன்.

**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663

